1996 ஆகஸ்ட் 20] [திரு. ம. அப்துல் லத்தீப்]

பிரச்சினைகளை அமைச்சரவையில் இருக்கக்கூடியவர்கள், அதற்கான தகவல்களைச் சேகரித்து அவர்களுடைய சௌகரியத்தைப் பொறுத்து, விஷயத்தின் தன்மையையும் அவசரத்தையும் பொறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதிலே யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், there shall be a Question hour. இதிலே discretion கிடையாது. அடிக்கடி அவையிலே வந்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவது என்பது கூட ஏற்புடையது அல்ல. அதாவது....

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் இல்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றுவது கூட ஏற்புடையது அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது, வேதனையாகவும் இருக்கின்றது. ஏனென்றால், இந்த முடிவை அலுவல் ஆய்வுக் குழுவிலே-மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்களும் இருக்கின்ற அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்து, அதன்படி அவை முன்னவர் அவர்கள் இங்கே அதை அறிவிக்கின்றார்கள். இரண்டு அமைச்சர்களுடைய மானியங்கள் வருகின்ற நாட்களில், கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு, இரண்டு மானியங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு அதிக நேரம் அல்லது போதுமான நேரம் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத்தான், கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அதை ஏற்புடையதல்ல என்று சொன்னால், அதை அலுவல் ஆய்வுக் குழுவிலேயே அவர் தெரிவித்திருக்க வேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒருமித்தக் கருத்துடன் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவர்கள் இங்கே அப்படிக் கூறுவது சரியல்ல என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ம. அப்துல் லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதில் ஏதோ சரியாகச் சொல்லவில்லையோ என்னவோ தெரியாது. அல்லது அதைச் சொல்வதற்குரிய ஆற்றல் இல்லாமல் சொல்லியிருக்கிறேனோ என்னவோ, அதைக்கூட நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், நான் சொல்லும்போது அடிக்கடி என்று சொன்னேன். அடிக்கடி அதைத் தள்ளிவைப்பது, ஒத்திவைப்பது என்பது ஏற்புடையதல்ல என்றுதான் சொன்னேன். அடிக்கடி என்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன்.

[1996 ஆகஸ்ட் 20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு அமைச்சர்களின் மானியக் கோரிக்கைகள் இருக்கின்ற நாட்களுக்கு மட்டும்தான் இந்த முடிவு. அலுவல் ஆய்வுக் குழுவிலே நீங்கள் ஒத்துக்கொண்டுதான் இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது

Thiru M. Abdul Latheef: It is only an exceptional case. That cannot be a rule. ஆகையினால்தான் நான் சொல்கிறேன், அடிக்கடி செய்வது சரி அல்ல என்று. அதுவும் ஒத்திவைத்துவிட்டு, கேள்வி நேரம் இல்லை என்று சொல்லிவிட்டு, அந்த நேரத்தை வேறு காரியங்களுக்காக அவசர, அவசிய முக்கியத்துவம் என்ற பெயரிலே பயன்படுத்துவது சரியல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது என்றால், சப்ளிமெண்டரி போடலாம். அவர்கள் புதிய தகவல்களைப் பெறலாம். கேள்வி நேரத்தில்தான் அதைச் செய்ய முடியும். இன்னொன்று இந்தக் கேள்வி நேரம் என்பது ஒரு அவையினுடைய முக்கியமான நேரம். There shall be a Question hour. ஆனால் மற்றவை உங்களுடைய சமயோசித டிஸ்கிரஷனரி பவருக்கு உட்பட்டது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினைகூட நாளையிலிருந்து இருக்காது. நாளையிலிருந்து ஒவ்வொரு அமைச்சரின் மானியக் கோரிக்கைதான் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தினுடைய முக்கியத்துவத்தை ஆளுங்கட்சியும் உணர்ந்திருக்கிறது. எதிர்க்கட்சியும் உணர்ந்திருக்கிறது. அதிலே எந்த மாறுபாடும் இல்லை. ஆனால் இந்த அவையினுடைய வசதிக்காக, அவையிலே உள்ள அனைவருடைய வசதிக்காக, இரண்டு மானியங்கள் விவாதிக்கப்படுகிறபோது அமைச்சர்கள் விடை சொல்கிறபோது, அவை முடிகிறபோது 2-30 மணி ஆகிறது. பல உறுப்பினர்களுக்கு இது பெரும் துன்பமாக இருக்கிறது. எனவே அதற்காகத்தான் அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி, இரண்டு மானியங்கள் விவாதிக்கப்படுகிற நாளில் அன்றைக்கு மட்டும் இந்தக் கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாம் என்று மொத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைக்காக அன்றாடம், மறுநாள் ஒத்தி

1996 ஆகஸ்ட் 20] [பேராசிரியர் க. அன்பழகன்]

வைப்பதற்கு முதல் நாள், நான் தீர்மானம் கொண்டு வருகிறேனே தவிர, அவை ஏற்றுக் கொண்டதற்குத்தான் நான் தீர்மானம் கொண்டு வருகிறேனே தவிர, முன்னதாக ஏற்றுக் கொள்ளாததற்கு நான் தீர்மானம் கொண்டு வரவில்லை. அடிக்கடி கேள்வி நேரத்தை ஒத்திவைக்கிற நோக்கமும் இந்த அவைக்கு இல்லை. மேலும் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து அவசர முக்கியத்துவம் உள்ள பிரச்சினைகளுக்காக அதிக நேரம் எடுத்துக்கொண்டாலும் மானிய விவாதம் தடைபடுகிறது என்ற காரணத்தால்தான், நேற்றோ அல்லது அதற்கு முந்தைய நாளோ நம்முடைய முதலமைச்சர் அவர்களே தெரிவித்து, இப்படி அவசர முக்கியத்துவம் என்ற பெயரால் அதிக நேரம் செலவிடப்படுவது விவாதத்தைப் பாதிக்கிறது; எனவே ஒரே ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை மட்டும் எடுத்துக்கொண்டால் போதும் என்று அறிவுறுத்தி, அதுவும் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது அவையினுடைய மொத்த நலனுக்காகவே தவிர ஆளுங்கட்சியினுடைய நலனுக்காக அல்ல.

திரு. சி. ஞானசேகரன்: துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். இப்படியே நீட்டித்துக் கொண்டு போனால் நேரம் அதிகமாகிவிடும். மேலும் இன்றைக்கு சபையை அரை மணி நேரம் ஒத்தி வைக்கப் போகிறோம்.

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையினுடைய நன்மைக்காகவும் இது செய்யப்படுகிறது; இது ஏற்புடையது. ஒத்திவைக்கப்படுவது, தேவைப்படும்போது, ஒட்டுமொத்த நன்மைக்காக சில வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக, அப்படிச் செய்யப்படுகிறது. அதுவும் ஏற்புடையது. ஆனால் எதற்காக ஒத்தி வைக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல், வேறு பிரச்சினைகளுக்குப் போகிறபோது, அதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். ஆகவே நேற்றே அதை முடிவு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்....

அ

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் இதுவரையில் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டதில்லை, இப்போது கேட்கிறேன். (சிரிப்பு) மானியக் கோரிக்கைகளை இரண்டு அமைச்சர்களும் முன்மொழிந்து விட்டு, மானியக் கோரிக்கைகள்மீது மாண்புமிகு உறுப்பினர் ஒருவரும் பேசிய பிறகு, அடுத்து பேச வேண்டியவர் எழுந்த பிறகு, இப்படி இந்தப் பிரச்சினையை, நேற்று நடந்து முடிந்த ஒரு பிரச்சினையை எழுப்பி, நேரத்தைக் கடத்தி, தொழிலாளர்கள் மீது அக்கறை இல்லாமல், (சிரிப்பு) மீனவர்கள் மீது அக்கறை இல்லாமல், உறுப்பினர்கள் நடந்து கொள்வது முறையா, தகுமா, சரியா என்று கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அக்கறை இருந்தால் உறுப்பினர்கள் அப்படியே அமரலாம்.

3. மானியக் கோரிக்கைகள் 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.சி. விஜயன்.

திரு. டி.சி. விஜயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழு கோடி தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இளைஞர்களின் எழுச்சி நாயகன், எங்களது தளபதி அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு வாக்களித்த என்னுடைய தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய கன்னிப் பேச்சினைத் தொடங்குகிறேன். இந்த கன்னிப் பேச்சில் ஏதேனும் தவறு இருந்தால் மன்னிக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் தொகுதியில் உள்ள திருவொற்றியூர் நகரம், கத்திவாக்கம் நகரம், மாதவரம் நகரம், மணலி தொழிற்பகுதி உள்ளிட்ட புழல் ஒன்றியம் ஆகிய பகுதிகள் தொழிற்சாலைகள் நிரம்பியவைகளாக உள்ளதால் ஏராளமான எண்ணிக்கையில் தொழிலாளர்கள், உழைக்கும் மக்கள் வாழ்கின்ற, பகுதிகளாக

விளங்குகின்றன. தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான கழக ஆட்சியின் மூலம் தங்களுக்குப் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும், இன்னும் பல நன்மைகள் யாவும் கிடைத்திடும் என்கிற திடமான நம்பிக்கையில் தொழிலாளர்கள் உள்ளார்கள்.

முற்பகல் 10-05

கடந்த 5 ஆண்டுகளாக திருவொற்றியூர் தொகுதியில் முந்தைய அரசு குறிப்பிடும்படியான சாதனை எவற்றையும் செய்யவில்லை. மாறாக, மணலி பகுதியில் அமைய இருந்த ஆரோமெட்டிக் திட்டம் அரியானா மாநிலத்திற்குச் செல்லும் நிலை உருவானதில் கடந்த ஆட்சிக்குப் பங்குண்டு.

திருவொற்றியூர் தொகுதியில் பல தொழிற்சாலைகள் உள்ளன. அப்பகுதியில் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய நிரந்தர அலுவலகம் ஒன்றை மணலி பகுதியில் அமைத்திடவும், மக்களின் இன்னல்களை அகற்றிடவும் அரசு முன்வர வேண்டும்.

போக்குவரத்து நெரிசலில் திருவொற்றியூர் பெரிதும் பாதிக்கப்படுகிறது. பெரிய அளவிலான நீண்ட கன்டெயினர்கள் 24 மணி நேரமும் எடுத்துச் செல்லப்படுவதால், திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மழைக்காலத்தில், மக்கள் பயன்படுத்த முடியாதபடி பெரும் பள்ளங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. மேலும் குறுகிய சாலையாக வேறு இருப்பதால், நெரிசல் அகல, பல மணி நேரமாகி, வீண் காலதாமதம் ஆகின்றது. எனவே, திருவொற்றியூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, புதுப்பித்து சோடியம் மின் விளக்குகளை அமைத்திட எழில்மிகு சென்னை-2000 திட்டத்தில் சேர்த்திட அரசு முன்வரவேண்டும.

திருவொற்றியூர் தொகுதியில் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். அவர்கள் பயன்பெறும் வண்ணம், புதிய நவீன வசதிகளுடன் கூடிய ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒன்றை உடனே நிறுவிட அரசு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.